www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் Christianity | Three Hours / Gr -12 (2023) | 43 | T | I,II |

### பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்து தரப்பட்ட புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.**

01. பைபிள் என்பதன் கிரேக்கச் சொல்
1) பபிறஸ் 2) பிபிளுஸ் 3) பிபிளோஸ் 4) டா பிபிலியா 5) வல்கேற்

02. பலஸ்தீனா உரோமைப் பிராந்தியமாக்கப்பட்டது எப்போது
1) கி.மு 122 2) கி.மு 722 3) கி.மு 27
4) கி.மு 63 இல் 5) கி.மு 636

03. திருத்தூதரான யோவான் புதிய ஏற்பாட்டில் எழுதிய நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
1) திருமுகங்கள் 2) சுற்றுமடல் 3) நற்செய்தி நூல்கள்
4) திருவெளிப்பாடு 5) யோவானின் உடல்

04. யேசுவின் பகிரங்க வாழ்வின் முக்கிய நிகழ்வோடு தொடர்புடைய சமவெளி
1) அக்கோ சமவெளி 2) சாரோன் சமவெளி 3) ஜெஸ்ரோல் சமவெளி
4) பெலிஸ்திய சமவெளி 5) கடற்கரை சமவெளி

05. இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் பயணித்த காலம்
1) 40 வருடங்கள் 2) 430 வருடங்கள் 3) 150 வருடங்கள்
4) 75 வருடங்கள் 5) 1200 வருடங்கள்

A. நாசரேத்தூர் D. எபிரோன்
B. கானா E. பெத்தானியா
C. தோத்தான்

06. பலஸ்தீனாவிலுள்ள மிக உயரமான நகரம்
1) A 2) E 3) D 4) C 5) B

07. யோசேப்பு இஸ்ராயேலருக்கு விற்கப்பட்ட இடம்
1) C 2) D 3) E 4) A 5) B

08. யேசு வளர்ந்த இடமும், யேசுவின் முதல் அருளடையாளம் நிகழ்ந்த ஊரும் முறையே
1) B,C 2) A,B 3) A,D 4) B,E 5) A,C

09. லாசர், மாத்தா மற்றும் மரியாவின் ஊர்
1) நாசரேத்தூர் 2) பெத்தானியா 3) தோத்தான் 4) எபிரோன் 5) கானா



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

10. இஸ்ராயேலரின் மிகத்தூய்மையான அடையாளம்
   1) பத்துக்கட்டளை 2) சீனாய்மலை 3) எருசலேம் தேவலாயம்
   4) வெண்கலப்பாம்பு 5) உடன்படிக்கைப் பேழை

11. இவ்வுலகில் இறைவனின் சாயலுக்கும் உருவத்திற்கும் சமமானதாக கருதப்படும் ஓரே படைப்பு
   1) சூரியன் சந்திரன் மட்டும் 2) மிருகங்களும் மனிதனும் மட்டும்
   3) பறவைகள் மீனினங்கள் மட்டும் 4) காயீன் ஆபேல் மட்டும்
   5) ஆணும் பெண்ணும் மட்டும்

A. இறைவன் மனிதனை விட மிகத் தொலைவில் வீற்றிருப்பவர்.
B. மனிதனுக்கு அவரிடத்திற்கு நெருங்க முடியாது.
C. இறைவனின் முகத்தை எவராலும் தரிசிக்க முடியாது.
D. இறைவனின் முகத்தை காண்பது மரணத்துக்கு ஏதுவாக அமையும்.

12. இக்கூற்றுக்களுக்கு பொருத்தமாக அமையும் மரபு
   1) J மரபு 2) E மரபு 3) D மரபு 4) P மரபு 5) J,D மரபு

13. திருவிவிலியத்தில் ஆணவத்தின் நகரமாக அறிமுகப்படுத்தப்பட்ட நகரம்
   1) பபிலோனியா 2) எகிப்து 3) அசீரியா 4) கிரேக்கம் 5) உரோம்

14. இயேசு தனது சிலுவையைத் தானே சுமந்து சென்றது போல தன்னை பலியாக பலியிடுவதற்கு தேவையான விறகுக் கட்டுகளை சுமந்து சென்றவர்.
   1) ஆரோன் 2) மோசே 3) ஈசாக் 4) ஆபிரகாம் 5) யோசேப்பு

15. பத்துப் பெரும் துன்பங்கள் அனுப்பப்பட்டதன் நோக்கமாக அமைவது
   1) எகிப்தியரை அழிக்க வேண்டும் என்பதற்காக
   2) மோசே, ஆரோனின் தலைமைத்துவத்தை தெரிவிக்க
   3) துன்பங்களினூடாக தண்டனையை வழங்க
   4) இறைவனின் அதிகாரத்தைப் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் வெளிப்படுத்த
   5) மோசே விடுதலை வீரன் என்பதை விளக்குக.

16. பின்வரும் இறைவாக்கினருன் ஒருவரின் பெயரின் பொருள் "இறைவன் மீட்கிறார்" என்பதாகும். அந்த இறைவாக்கினர் யார்?
   1) எசாயா 2) எரேமியா 3) எசேக்கியேல் 4) ஒசேயா 5) ஆமோஸ்

17. திருவிவிலியத்திற்குரிய சில நூல்களின் சோடிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஞான இலக்கிய நூல்களுக்குரிய நூல்களின் சோடி எது?
   1) ஒபதியா, யோனா 2) யோபு, சபை உரையாளர் 3) யோசுவா, நீதிபதிகள்
   4) எசாயா, எரேமியா 5) ரூத், எஸ்தர்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

18. தேவாலய வரி ஷெக்கேல் நாணயமாகச் செலுத்தப்பட்டமைக்கான காரணம்.
    1) அவற்றை நீண்ட காலம் வைத்திருக்க முடியுமாய் இருந்தமையாகும்.
    2) ஷெக்கேல் நாணய கொடுக்கல் வாங்கல் இலகுவாய் இருந்தமையாகும்.
    3) உரோம நாணயத்தில் சீசரின் உருவம் பதிக்கப்பட்டிருந்தமையாகும்.
    4) ஷெக்கேல் நாணயம் பெறுமதியில் கூடியதாக காணப்பட்டமையாகும்.
    5) வேறு நாணய அலகுகளுக்கு மாற்றுவது இலகுவானதாக காணப்பட்டமையாகும்.

19. "மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்" என யாரால் யாருக்கு கூறப்பட்டது.
    1) யேசுவால் மார்த்தாவுக்கு
    2) யேசுவால் எலிசபேத்துக்கு
    3) யேசுவால் அன்னை மரியாவிற்கு
    4) யேசுவால் சுவக்கீனுக்கு
    5) யேசுவால் வெரோணிக்காவிற்கு

20. சினகொக் என்ற கிரேக்க சொல்லின் அர்த்தம்
    1) பாதுகாத்தல், வழிநடத்தல்
    2) பாதுகாத்தல், பராமரித்தல்
    3) கற்பித்தல், போதித்தல்
    4) அர்ப்பணித்தல், காணிக்கை செலுத்துதல்
    5) மக்களை ஒன்று சேர்த்தல், ஒன்று கூடல்

(20x1 = 20 புள்ளிகள்)

❖ **பகுதி (I) இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி (II) இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி I

01. 1) இறை ஏவுதலால் நூலாக்கப்பட்ட திருமறை நூல்களின் நோக்கங்கள் இரண்டினை (2 தீமொ 3 : 16 இல் குறிப்பிட்டுள்ளவாறு) எழுதுக. (2 புள்ளிகள்)
    2) திருவிவிலியம் ஏனைய நூல்களில் இருந்து வேறுபடுவதற்குக்கான காரணங்கள் 2 தருக. (4 புள்ளிகள்)
    3) கத்தோலிக்க திருச்சபையானது திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் போது விசுவாச அடிப்படையில் பழைய ஏற்பாட்டில் அங்கிகரிக்கப்பட்டுள்ள 39 நூல்களுக்குப் பதிலாக 46 நூல்கள் என ஏற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதி செய்த திருச்சங்கங்கள் மூன்று தருக. (6 புள்ளிகள்)
    4) யாக்கோபு தனது மகன் யோசேப்பை மிக அதிகமாக அன்பு செய்யக் காரணமாக இருந்த விடயங்கள் நான்கு எழுதுக. (8 புள்ளிகள்)

02. 1) திருவிவிலியத்தின் முதல் நூலான தொடக்க நூல் இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது அவை எவை? (2 புள்ளிகள்)
    2) பாபேல் கோபுரம் உருவாக்கப்படக் காரணமாக இருந்த விடயங்கள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)
    3) மனிதன் பாவத்தில் வீழ்ந்ததன் காரணமாக முறிவடைந்த உறவுகள் மூன்றினை எழுதுக. (6 புள்ளிகள்)
    4) குலமுதுவர்கள் வழியாக இஸ்ராயேல் மக்கள் பெற்ற சேவைகள் நான்கினை தந்து விளக்குக. (8 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03\. 1) யூதர்கள் தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்திய நாணயங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

2) யூதமக்கள் மத்தியில் யேசு வரிதண்டுவோரை இறையாட்சியின் பங்குதாரர் ஆக்குவதற்குச் செயற்பட்டார் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் தருக. (4 புள்ளிகள்)

3) பரிசேயர் யேசுவின் பணி வாழ்வின் போது அவரில் முன்வைத்த முறைப்பாடுகள் மூன்று தருக. (6 புள்ளிகள்)

4) பரிசேயரின் வாழ்க்கை முறையில் விசேடமாக இனங்காணக் கூடிய நான்கு பண்புகளை தருக. (08 புள்ளிகள்)

## பகுதி - II

04\. 1) பாலைவனப் பயணித்தின் போது இஸ்ராயேல் மக்கள் இறை பாரமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினை தந்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

2) கிறிஸ்தவ மாணவனாகிய நீர் அன்றாட வாழ்வில் இறை பராமரிப்பை அனுபவித்த சந்தர்ப்பங்கள் ஐந்தினை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

05\. 1) எலோகிம் பாரம்பரியத்தின் கருப்பொருளினூடாக வெளிக்கொணரும் மறையுண்மைகளைத் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

2) இன்றைய காலகட்டத்தில் நன்நெறிமிக்க தூய வாழ்க்கை வாழ நீர் எவ்வாறான முயற்சிகள் எடுத்து வாழுவீர் என 5 உதாரணங்களை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

06\. 1) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

2) ஓசேயா இறைவாக்கினரின் முக்கிய படிப்பினை பற்றிய போதனைகளினூடாக இன்றைய சமூகத்துக்கு நீர் முன்வைக்கும் கருத்துக்களை தந்து விளக்குக. (10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!